Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (Oct 2026), pp. 257–266
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# கள்ளிக்காட்டின் வாழ்வியல் பதிவுகள்

**முனைவர். ஜஸ்டின் பியுலா ம***

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஹோலி கிறாஸ் கல்லூரி, நாகர்கோவில், *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். ஜஸ்டின் பியுலா ம — justinbuela@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | 4 October 2026 | — |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | TAJP-2026-00051 |

## ஆய்வுச்சுருக்கம்

ஒரு சமூகத்தின் உண்மையான வரலாறு, மண்ணின் மணம் கமழும் இடத்தில்தான் வேரூன்றிக் கிடக்கிறது.அந்த வகையில், கள்ளிக்காட்டின் வாழ்வியல் பதிவுகள் என்பது ஒருநிலப்பரப்பின் வரலாற்றை மட்டும் பதிவு செய்வதன்று. அந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், உணவு, மருத்துவம், திருமணம், தொழில், மக்கள் மண்மீது கொண்ட பற்று, இறப்பு என அவர்களின் வாழ்வின் ஒவ்வொரு துடிப்பையும் பதிவு செய்யும் பண்பாட்டு ஆவணமாகத் திகழ்கிறது கவிஞர் வைரமுத்துவின் கள்ளிக்காட்டு இதிகாசம். நாகரீக அறிவியல் வளர்ச்சியில் மறைந்து போன கள்ளிக்காட்டு மக்களின் வாழ்வியல் மற்றும் சமூகப்பின்னணியையும் வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.மக்களின் அன்றாட வாழ்வே அவர்களின் பண்பாட்டின் கண்ணாடி என்பதை உணர்த்தும் வகையில், அவர்களிடையே நிலவிய நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் எவ்வாறு தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டன என்பதும், இயற்கையோடு இயைந்த அவர்களின் வாழ்வியல் அறிவின் ஆழத்தைப் புலப்படுத்துவதோடு, அவர்கள் வாழ்வில் பதிந்திருக்கும் பண்பாட்டு நினைவுகள் அழிவதில்லை என்பதையும் உணர்த்துகிறது. மண்ணோடு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை மறக்கப்படும்போது, ஒரு தலைமுறையின் நினைவு மறைகிறது. அந்த வகையில், கள்ளிக்காட்டு மக்களின் வாழ்வியல் பதிவுகள், கடந்த காலத்தைப் பேசும் ஆவணமாக மட்டுமல்லாமல், மரபின் வேர்களை எதிர்காலத் தலைமுறையோடு இணைக்கும் பண்பாட்டுப் பாலமாகவும் இவ்வாய்வு விளங்குகிறது.

**Keywords / திறவுச்சொற்கள்:** வாழ்வியல் பதிவுகள்; நம்பிக்கைகள்; சமூகப் பின்னணி; பண்பாட்டு நினைவுகள்

## Abstract

The true history of a society is rooted in the fragrance of the soil. In that way, the records of the life of the people of Kallikattu... record only the history of a land and record every pulse of their life, including their beliefs, customs, food, medicine, marriage, professions, attachment to the soil, and death. The main purpose of this study is to reveal the life and social background of the people of Kallikattu, which have disappeared in the development of civilization and science, in a

way that shows that the life of the people is the mirror of their culture. How the beliefs and customs that existed among them were passed down from generation to generation...in harmony with nature...not only reveals the depth of their knowledge of life, but also shows that the cultural memories embedded in their lives do not disappear. When the lives of people who lived with the soil are forgotten, the memory of a generation disappears. In that way, the life records of the people of Kallikattu are not only a document that speaks of the past. This study also serves as a cultural bridge that connects the roots of tradition with future generations.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ம, மு. ஜ. பி. (2026). கள்ளிக்காட்டின் வாழ்வியல் பதிவுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01). https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8734

## முன்னுரை

மனித வாழ்வின் பிரதிபலிப்பாகவே இலக்கியங்கள் உள்ளன. மனித நாகரீகம் வளர வளர இலக்கியங்களும் வளர்ச்சி பெற்றுக் கொண்டேயிருக்கின்றன. ஒரு நாட்டின் பண்பாட்டினை அந்நாட்டு இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது. இவ்வகையில் உருவான இலக்கியமே நாவல் இலக்கியம். "நாவல் என்பது காலத்தால் உருவான ஒரு கலை வடிவம் ஆகும். தன்னைச் சார்ந்தவர்களுக்கோ அல்லது தன்னைப் போன்ற பிற மனிதர்களுக்கோ இயற்கையாக நேருகின்ற அனுபவங்களை பகிர்ந்து கொள்ள அவனுள் இருக்கும் ஆர்வமுமே கதை பிறக்கக் காரணங்களாகின்றன| என்பார் ஆசிரியர். இதன் மூலம் ஆசிரியன் தன்னுடைய தான் பார்த்த இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் போது அத்துன்பத்தின் அளவு குறைவதோடு இன்பம் தரும். இதனால் மகிழ்ச்சியும் இரட்டிப்பாகிறது. இந்த இயற்கையின் தூண்டுதலே இலக்கியம் படைக்கவும் படிக்கவும் துணை நிற்கிறது. நாவலாசிரியனும் இதையேதான் விரும்புகின்றான். நாவல் எடுத்துரைக்கும் போக்கில் அமையும் கதையாகும். விழுதுவிட்டு நிற்கும் ஆல் போல பல கிளை விட்டுக் கதையை வளர்த்து பல மணி நேரம் படிக்க கூடியதே. நாவலாகும். ஆசிரியரால் படைக்கப்பட்ட ஒரு கற்பனையான உண்மை உலகை புதிய உலகை வாசகர் மனத்தில் தோற்றுவிப்பது நாவல். நாவல் என்ற சொல் "புதுமை" என்ற பொருளையேத் தரும். சமுதாயத்தின் கண் காணப்படும் ஒத்தத்தன்மைகளும் வேற்றுத்தன்மைகளும், ஏற்றுக் கொள்ளுதலும் மறுத்தலும் போன்ற அனைத்தும் காணப்பெறும். அவை அனைத்தையும் அறிந்தால் தான் சமுதாயத்தை விளக்கிக் கொள்ள இயலும்[1], மனித நாகரீக வளர்ச்சியினால் ஒவ்வொரு காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப கலாச்சாரம் பண்பாடு ஆகியவை மாறுதல் அடையும். இதனால் சடங்குகள் நம்பிக்கைகள் மாற்றம் பெறும். மரமும் கிளையும் போல் சமுதாயமும் தனிமனித வாழ்க்கையும் பிணைந்துள்ளன. சமுதாயத்தின் மேடுபள்ளங்களை குறைநிறைகளை கவிஞர் நாவலில் காணமுடிகிறது. அவரது கருத்துக்கள் ஒவ்வொன்றும் அவரோடு நெருங்கிய தொடர்புடையனவாக காணப்படுகின்றன. கவிஞரின் இந்நாவலில் காணலாகும் வாழ்வியல் பதிவுகள் ஆராயப்படுகின்றன.

### திறவுச்சொற்கள்

கள்ளிக்காடு, வாழ்வியல், பண்பாடு, நாட்டுப்புற வாழ்வியல், சமூகச் சிந்தனை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், நாட்டுப்புற மருத்துவம், உணவுப் பண்பாடு, திருமணச் சடங்குகள், இறுதிச்சடங்குகள், வேளாண்மை, உழைப்பு, மண்பற்று, மண்ணோடு உறவு, ஆகிய பண்பாட்டு அடையாளங்களைக் கொண்டுள்ளது.

### சமூகச் சிந்தனை

சமூகம் என்பது பல குடும்பங்களின் கூட்டுத் தொகுப்பாகும். சமூகத்து மக்களின் ஒருமைப்பாட்டுணர்வு சமூகத்தின் எழுச்சிக்கு முழு முதற் காரணமாய் அமைகின்றது. ஆனால் ஒற்றுமையின்மையோ சமூகத்தின் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணமாய் அமைந்து விடுகின்றது. பிரெஞ்சு சமூகவியல் மேதை எமில் துர்க்கேம் "சமூகத்தின் பல பகுதியிடையே ஏற்படும் சமன்பாட்டுக் குலைவும் சமூக மக்களிடையே காணப்படும் ஒற்றுமை உணர்வுக் குலைவும் சமூக ஒழுங்குக் குலைவிற்குக் காரணங்கள் ஆகும்"[2] என்று கூறுகிறார்.

கள்ளிக்காட்டு இதிகாச நாவலில் வரும் சமூகச் சிந்தனையாக, ஒரு தந்தையானவர் தன் பிள்ளைகளால் படும் துன்பகளுக்கு அளவே இல்லை. இதனால் தன்னுடைய வாழ்வில் நிம்மதியில்லாமல் பல்வேறு நிலைக்கு ஆளாகின்றார். தன்னுடைய சொந்த ஊர் மண்ணில், தான் பார்த்து வளர்ந்த மண்ணில் அரசாங்கம் அணைகட்டப் போகிறது என்பதை அறிந்ததும் நான் இந்த மண்ணிலே அழிந்து விட்டால் என்ன என்று நினைக்கிறார். இறுதியில் அம்மண்ணிலே உயிர்த் துறக்கிறார்.

### நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்

ஒவ்வொரு சமுதாயத்திலும் பல்வேறு நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் காணப்பெறுவது இயல்பு. கள்ளிக்காட்டு மக்களிடையே, விளக்கு வைத்த பிறகு வீட்டிற்கு வெளியே உப்பும் சுண்ணாம்பும் தரக்கூடாத பொருட்களாகக் கருதுகின்றனர்.விவசாயக் கலாச்சாரத்தில் ஆடுமாடுகள குடும்பத்தின் அங்கமாயின. வறுமையின் வாசலுக்கு அது வரவுதான். “ஒரு மாடு குடும்பங்காக்கும், ஒன்பது மாடு குலங்காக்கும்”[3] என்பது அவர்கள் வாழ்வில் வேரோடிய நம்பிக்கை ஆகும்.அம்மக்களிடையே “மறுமணம் ” செய்து கொடுக்கும் பழக்கம் இருந்துள்ளது. மொக்கலாசுவின் தாயாகிய செல்லத்தாயி ஒரு விதவைப்பெண். அவளுக்கு இரண்டாவது திருமணம் செய்யப்போவதை அறிந்த மொக்கராசு ஆத்தா ஒனக்கு கல்யாணமா? என்று கேட்க அவள் மனமுடைந்து கூறும் போது “மறுமணம் என்பது குலவழக்கத்தில் வழிவழியாக வந்ததுதானே! வழிமாறிய வழக்கு இல்லையே”[4] என்று கூறுவதன் மூலமும் அறியமுடிகிறது. மேலும், வாழா வெட்டியாக இருக்கும் பெண்ணுக்கும் மறுமணம் செய்து வைக்கும் வழக்கம் கள்ளிக்காட்டில் இருந்துள்ளது. சின்னுவின் மனைவி கலுவாயி ஏழு வருடமாக வாழாவெட்டியாக வாழ? அவளது பெற்றோர் சின்னுவின் தந்தை பேய்த்தேவரிடம், “ஒண்ணு அவளவச்சுப் பொழைக்கணும். இல்லாட்டி தாலிய வாங்கிட்டு ஆள விட்டுரணும். நீங்க தாலிய வாங்கிட்டா அன்னைக்கே இன்னொரு தாலிகட்டத் தாய்மாமன்காரன் தயாராயிருக்கான்"[5] என்று கூறுவதன் மூலம் மறுமணம் என்பது கள்ளிக்காட்டு மக்களின் வாழ்க்கை முறையில் ஒன்றாகியுள்ளது என்பது புலனாகிறது.

“குழந்தையும் தெய்வமும் குலத்தால் ஒன்று என்று கூறுவார்கள். கள்ளிகாட்டு மக்களிடையே பிறந்த குழந்தைக்குச் “சேனை தொட்டு வைப்பது" ஊர்வழக்கமாக இருக்கிறது."சேனை தொட்டு வைப்பது என்பது வசம்பின் நுனியில் எண்ணெய் தொட்டு குழந்தையின் வாயில் மூன்று முறை வைப்பார்கள் மூத்தவர்கள். ஒவ்வொரு முறை தொட்டு வைக்கும் போதும் “ஓம்புத்தி போயி எம் புத்தி வா”[6] என்று சொல்லிச் சொல்லி வைப்பது பழக்கவழக்கமாகவுள்ளது.

கள்ளிக்காட்டு வாழ்க்கை முறையில் மாடுகள் தெய்வமாகக் கருதப்படுகின்றன. அவர்கள் மாட்டை வெட்டுவதை மன்னிக்கமாட்டார்கள். கள்ளிக்காட்டு விவசாயி

ஆட்டுக்கறி, கோழிக்கறி, பறவைக்கறி, பன்றிக்கறி, உடும்புக்கறி, எலிக்கறி கூடத் தின்னுவானே தவிர மாட்டுக்கறி தின்னமாட்டான். மாட்டை அடிப்பது கள்ளிகாட்டு மக்களிடையே காணப் படுவதில்லை என்பதன் மூலம் அறிய முடிகிறது. சில மாடுகளுக்கு முதுகில், சுழி இருக்கும். சில சுழி குடும்பத்தையே கழிச்சிடும் என்று சொல்வார்கள். ஏறு பரான் சுழிநடு முதுகில் இருந்தால் குடும்பம் தழைக்குமாம். கல்லப் போட்டால் நெல்லு வெளையுமாம். இறங்கி பரான் சுழி இருந்தால் குடிவிளங்காதாம் "நெல்லப் போட்டாக் கல்லு" வெளையுமாம் இத்தகைய மாடுபற்றிய பழக்க வழக்கங்கள் கள்ளிக் காட்டு மக்களிடையே இருந்து வந்துள்ளது தெரிகிறது.

**மருத்துவம்**

“நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்”[7]

என்று திருவள்ளுவர் பாடும் பாடலின் கருத்து நோயைத் தணிக்கும் மருத்துவன் நோயை இன்னதென்று அறிந்து நோயின் காரணத்தை ஆராய்ந்து, அதை தீர்க்கும் வழியையும் அறிந்து, பிழைபடாமல் செய்தல் வேண்டும் என்பதேயாகும். நோயில் படுத்திருக்கும் அதாவது “சீக்காய்க் கிடப்பவர்களுக்கும், பிள்ளைத் தாய்ச்சிக்கும் கோழிச்சாறு" கொடுப்பார்கள். இது உணவு மட்டுமல்லாமல் மருந்தும்கூட என்று கூறுகின்றனர். இதன் மூலம் வெடக்கோழியின் மருந்தியல் தன்மை புலனாகும். சுக்கு, மிளகு, திப்பிலி, தூதுவளை ஆகியவைகள் மிக்க மருந்து தன்மையுடையன. இருமலுக்கு இவையெல்லாம் மருந்தாகப் யன்படுத்தப்படுகின்றன. இவைதவிர மிளகாய், வெல்லம், லேகியம், நாட்டுக்கோழி, நண்டுச்சாறு, இவையும் பயன்படுத்தப்பட்டன. பேய்த்தேவர் மகன் சின்னுவிற்கு இருமல் வந்ததும் இவையெல்லாம் கொடுக்கப்பட்டது. இருப்பினும் இருமல் குறையவில்லை. இதனால் கள்ளிப்பட்டிக்குப் பருத்தி வாங்க வந்த நாடார் ஒரு மருந்து சொன்னார். 'நரித்தோலச் சுட்டுத் தேன்ல கொழச்சுக்குடு அண்ணாச்சி ஆயுசுக்கும் இருமல் அத்துப் போகுமில்ல"[8] என்பதே அம்மருந்து, அதன்படி பேய்த்தேவர் மருந்து செய்ததில் சின்னுவின் இருமல் போன இடம் தெரியாமல் போய்விட்டது.

பேய்த்தேவர் தன்பேரன் மொக்கராசுவிடம் தன்னுடைய பர்வீகம் பற்றிக்கூறும் போது. அதில் வரும் காயாம்புத்தேவருக்கு ஆறு மகன்களுக்குப் பிறகு முத்துக்கண்ணி" என்ற பெயருடைய பெண் குழந்தை பிறந்ததும் அவளுக்கு திடீரென்று ஒருநாள் கழுத்திற்கு கீழே சிறியதாக ஒரு தேமல் வந்ததாம். அந்த தேமலுக்கு கழுதைப் பாலில் குளித்தால் தேமல் போய்விடும் என்று வயதான ஒரு பெரியவர் வைத்தியம் சொல்ல, அண்ணன்மார்களும் அப்படியே செய்கின்றனர். இதனால் சும்மா வேட்ட நாயைக் கண்டமாதிரி தேமல் போன இடம் தெரியாமல் போய்விட்டது. இதன் மூலம் கழுதைப் பாலின் மருத்துவ குணத்தை அறியலாம்.

காய்ச்சல் வந்த குழந்தைக்கு தேங்காய் எண்ணெயில் சூடத்தைக் காய்த்து தைலம் பண்ணுகின்றனர். இதை தலையில் தேய்க்க வேண்டும் மற்றொரு தைலம் வெள்ளைப்பூண்டுடன் மஞ்சளைத் தட்டிப் போட்டு இரண்டையும் வேப்பெண்ணெயில் போட்டுக் காய்த்து பயன்படுத்துகின்றனர். இதை உள்ளங்காலில் தேய்க்க வேண்டும் இரு மருந்தையும் அதாவது தலைக்குத் தேய்ப்பதை காலுக்கும், காலுக்குத் தேய்ப்பதை தலைக்கும் மாற்றி மாற்றித் தேய்த்தால் காய்ச்சல் கடுங்காய்ச்சலாகிவிடும். மேற்கூறியவற்றின் மூலம் கள்ளிகாட்டு மக்களின் இற்கை மருத்துவத்தின் தன்மைகளை நன்கு, உணர முடிகின்றது.

### உணவு

எல்லா உயிர்களும் உயிர் வாழ்த் தேவையானது உணவேயாகும். இந்த உணவுகள் பலவகைப் படுகின்றன. உயர்வான உணவுகள் பெரிய பணக்காரர்களால் மட்டுமே உண்ணக்கூடியது. கள்ளிக்காட்டில் விவசாயம் செய்யும் ஒவ்வொரு மனிதனும் உண்ணும் உணவு 'கேப்பைக் களியும், சோளக் கஞ்சியுமே" ஆகும். கஞ்சி, கூழ், களி, சோறு இவற்றில் ஏதாவது ஒரு உணவு தயாரிக்க மட்டுமே வசதிப்பட்ட உழைப்பாளிகள் மிளகாய், வெங்காயம், துவையல், கருப்புகட்டி, வெல்லம், வற்றல் தேங்காய்ச்சில் இவற்றில் ஒன்றை முந்தைய ஒரேவகை உணவுக்கு மாற்றாகத் தொட்டுக் கொள்வார்கள். இதில் இரண்டு "மறுமாத்தம்" (கூட்டு) வைத்துச் சாப்பிடுகிறவன் கள்ளிக் காட்டைப் பொறுத்தவரையில் வசதியானவன் என்று கூறுகின்றனர். இதுதவிர காணத் துவையல் கஞ்சிக்குப் பயன்படுத்துகின்றனர். இயற்கை தந்த செடிகளிலிருந்தும் மறுமாத்தம் தயாரிக்கின்றனர். இங்கு மொக்கராசு "கட்டக்கடகா பறித்து, கான மிளகாய்ச் செடியிலிருந்து பிஞ்சும் காயும் பிடுங்கி இரண்டையும் பறையில் வைத்து அரைத்து, உப்பிற்கு பதிலாக தும்பைச்செடி பறித்து அதிலிருந்து சாறு பிழிந்து மறுமாத்தம் தயராக்குகிறான். இதன் மூலம் இயற்கையையும் மறுமாத்தத்திற்கு அம்மக்கள் பயன் படுத்துவது புலனாகும்.

கள்ளிக்காட்டில் ஆளான ஒரு பெண்ணிற்கு, ஆளான புதிதில் உளுந்தங்களியும் நல்லெண்ணெயும் சேர்த்து உதிரிக்கருப்பட்டித்தூள் விரவிக் கொடுப்பது வழக்காக உள்ளது. உணவு வகையில் நெல்லுச்சோறும் கோழிச்சாறும் தான் கள்ளிக்காட்டில் உயர்ந்த பட்ச உபசாரம். ஒரு வீட்டில் கோழிச்சாறு கொதிப்பதே ஒரு கவுரவம்தான். தீபாவளி,பொங்கல், அல்லது சீக்காய் கிடப்போருக்கும் இவை வழங்கப்படுகின்றன. இவற்றின் அவர்களின் மூலம் உணவுகளின் வகைகளையும் பயன்களையும் அறிய முடிகிறது.

### திருமணம்

திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் சடங்கு சம்பிரதாயங்களோடு பெரியோர்களால் நிச்சயிக்கப்படும் ஒரு சடங்கு ஆகும். கள்ளிக்காட்டில் பேய்த்தேவர் வகையறாக்களுக்கு மாப்பிள்ளை வீட்டில் கல்யாணம் நடப்பதே மரபு ஆகும். ஆனால் பொண்ணு வீட்டில் வைத்தும் திருமணம் நடத்துகின்றனர்.

கள்ளிக்காட்டு திருமணங்களுக்கு பகல் முகூர்த்தம் இல்லை. ஏனென்றால் அவர்கள் வேலை முடித்துக் கொண்டு வந்து சேர இரவு ஆகிவிடும். எனவே கள்ளிக்காட்டைப் பொறுத்தவரையில் இரவு கல்யாணமே லாயக்கு என்று கூறுகின்றனர். மாப்பிள்ளைக்கு மஞ்சளில் புது சட்டையும் புது வேட்டியும், பெண்ணிற்கு பட்டுப்புடவையும் மண உடையாக அணிவிக்கப் பெறுகின்றன.ஒரு திருமணத்திற்கு மிகவும் தேவையானவற்றில் ஒன்று திருமண மாலை தாம். இம்மாலை முழுவதும் ரோஜாப் பவால் கட்டப்பட்டிருக்கும். தோள் பகுதிக்கு மூங்கில் பட்டை வைத்து, நெஞ்சில் மாலை உருளாதவாறு பட்டி வைத்து, அடிப்புறத்தில் சம்பங்கிக் குஞ்சம் செய்து மாலையின் குறுக்கும் நெடுக்குக்கும் சரிகை சுற்றி ஒருதலை முறைக்கு உதிராதவாறு தயாரிக்கப்படுகிறது. ரோஜாப் பவின் மீது பன்னீர் தெளிக்கப் படுகிறது.

திருமணங்கள் வீடுகளிலே நடத்தப்பெறுகின்றன. வீட்டு வாசலில் போட்ட கொட்டகை பவோடு கட்டப்பட்ட வாழை மரங்கள், ஒலி பெருக்கிகள், போன்றவைகள் ஒரு திருமண வீட்டை அலங்காரம் செய்வன. இவையே, திருமண வீட்டை திருமண வீடாக காட்டும். மணமகனும் மணமகளும் அமர இரண்டு

நாற்காலிகள் "கிழக்கு" பார்த்து போட்டு அதன் மேல் துப்பட்டி போத்தி முகூர்த்த நேரம் வந்ததும் ஒலிபெருக்கியை நிப்பாட்டி, வாத்தியக்காரர்களும் கொட்டுக்காரர்களும் தங்கள் வேலையை ஆரம்பிக்க, பிள்ளையையும் பெண்ணையும் வரவழைத்து கொட்டுச்சத்தம் ஊர்பிளக்க குலவைச்சத்தம் வான்கலக்க தாலிகட்டி, மாலை மாற்றி, ஊர்ப் பெருசுகளின் காலில் விழ, அவர்கள் மணமக்களுக்கு நெற்றியில் திருநீறு இழுகிவிட முடிந்தது சடங்கு" இவ்வறு "மாறிவரும் சமூகத்தில் மணவாழ்க்கை என்பது, ஆணால் கிட்டும் சௌகரியங்களைப் பெண்ணும், பெண்ணால் கிட்டும் சௌகரியங்களை ஆணும் சட்டப்படி திருடிக்கொள்ளும் சம்பிராயமாக"[9] இருக்கிறது மணவாழ்க்கை.

**மார்க்கக் கல்யாணம்**

இது ஆண்களுக்குச்செய்யப்படும் ஒருவகை சடங்கு ஆகும். புஷ்பவதியான பெண்ணுக்குச் சடங்கு செய்வது போன்று, ஆணும் வயசுக்கு வந்துவிட்டான்னு கொட்டடிச்சு சொல்ற கூத்துதான் மார்க்கக் கல்யாணம். இது பெண்கள் விஷயத்துல இயற்கையாக நடக்கிறது, ஆண்கள் விஷயத்துல செயற்கையா நடக்குது. கல்யாணம் போலவே பந்தல் போட்டுக் தோரணம் கட்டிக் கொட்டடிச்சுக் குலவையிட்டு ரேடியோ கட்டிப் பாட்டுப் போட்டு சலம்பலோடத்தான் நடக்கும.ஂ ஆணக்குன்னு உண்டான அந்த உறுப்புல மேல தோல மட்டும் எடுத்து விட்டுட்டா நாளனப்ப்பினை நல்லது. அங்கு அழுக்குச் சேராது. ஒரு வயசுப் பயலுக்கு ஒரு நாவிதரு அந்தக் தோல வைத்திய முறைப்படி நீக்குவிடற வைபவந்தான் மார்க்க கல்யாணமாகும். இவ்வாறு கள்ளிக்காட்டு மக்களின் திருமணம் முறைகள் காணப்படுகின்றன.

**கலாச்சாரம்**

ஒரு சமூகத்தில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்களின் அடிப்படையிலே கலாச்சாரம் அமைக்கப்படுகிறது. கள்ளிக்காடு விவசாயக் கலாச்சாரத்தை உடையது. விவசாயக் கலாசாரத்தில் ஆடுமாடுகள் குடும்பத்தின் ஓர் அங்கமாகும். ஆடுமாடுகள் இறந்தால் ஆளாளுக்கு இழவு கேட்பது கள்ளிக்காட்டுக் கலாச்சாரம் ஆகும். விவசாயக் கலாச்சாரத்தில் கடவுளாகவும், வேலைக்காரனாகவும் இருப்பது மாடுதான். வருசமெல்லாம் அடிவாங்குவதும் தைபொங்கல் வந்தால் அவனவன் அரசியலைக் கொம்புகளில் தாங்கிக் கொண்டு சூடம் சாம்பிராணியோடு வணங்கப்படுவதும் அதே மாடுதான். அந்த மாட்டை அடித்துத்தின்னுவது என்பது கள்ளிக்காட்டில் குடும்பத்தில் ஓர் ஆளை அடித்துச் சாபிடுவது மாதிரி. எந்தக் கறிக்கும் மாட்டுக்கறி தாழ்ந்தல்ல. ஆனால் மாட்டுக்கறி தின்ன மாட்டேன் என்னும் விரதம், மாட்டின் மீது அவன் கொடுள்ள பாசம், விசுவாசம். தனக்குச் சோறு போடும் மாட்டைக் கூறு போட, விரும்பாது கள்ளிக்காட்டுக் கலாச்சாரம். இவை கள்ளிக்காட்டு மக்களின் தொழிலையும், அத்தொழிலை செய்ய உதவும் விலங்குகளைப் போற்றி பொதுகாத்ததையும் கூறுவதாக உள்ளது.

இதுதவிர கள்ளிகாட்டுக் கலாச்சாரத்தில் பெண்களுக்கு ஈராக்கும் இத்த சேலையுமே ஆடையாக உள்ளன. அரைப்படி சோளமும் அவத்தக் கஞ்சியுமேஅன்றாடங் களாகிவிட்ட ஒரு வறட்டு வாழ்க்கைக்கு வாக்கப்பட்டு சௌகரியங்கள் எதுமின்றி பாடுகளை மட்டுமே பகிர்ந்து கொள்கின்றனர்.

கள்ளிக்காட்டு விவசாயக் கலாசாரத்தில் புருசன் பொண்டாட்டி உறவு என்பது வெறும் உரிமைகளை முன்னிறுத்தி ஏற்படுவதல்ல. கடமைகளை முன்னிறுத்தியே கட்டப்படுவதாகும். இதன் மூலம் மக்களுடைய கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை நிலையினையும் அறிய முடிகிறது.

கள்ளிக் காட்டில் இறந்த ஒருவரை படுக்க வைப்பது கலாசாரமன்று. “பிணங்களுக்கு கிடந்த திருக்கோலம் அல்ல, அமர்ந்த திருக்கோலம் தான்"[10] என்று கூறுவதன் மூலம் அவர்களது கலாசாரம் புலனாகும்.கணவன் மனைவி பற்றிய கலாச்சார உறவு, இறந்தவர்களுக்கு செய்யப்படும் மரியாதை மற்றும் விவசசாய கலாசாரத்திற்கு உதவும் விலங்குகளை தெய்வமாக போற்றும் கலாச்சாரமும் மேற்கூறியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

**தொழில்**

இயற்கையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் தொழிலே பழங்காலத்தில் தொழிலெனக் கருதப்பட்டது. "செய்யும் தொழிலே தெய்வம்" என்பார்கள். உலக இயக்கத்தின் உயிர்நாடி தொழில்தான். உழைப்பால் எதனையும் உருவாக்க இயலும். "உழைக்காதவன் உண்ணலாகாது" என்று திருமறை கூறுவது போன்று வேலை இல்லாதவனுக்கு சாப்பாடு எதற்கு? எச்சில் சோற்றுக்காரனுக்கு டம்பம் எதற்கு? என்று ஒரு பழ மொழியும் உள்ளது. கள்ளிக்காட்டில் மக்கள் செய்யும் தெழில்களாக ஆசிரியர் பின் வருமாறு கூறுகிறார்.

தொழில் செய்யும் போது தொழிலின் சுமை தெரியாமல் இருக்கப் பாடல்களைப் பாடுகின்றனர். அப்பாடல்களிலேயே அவர்கள் பயிரிடும் முறையும் கூறப்படுகிறது. இங்கு பேய்த்தேவர் தன் மகன் சின்னுவிடம் நெல்லு நாட்டா ரெண்டு நாத்துக்கு மத்தியில நண்டோடணும். கரும்பு நட்டா ரெண்டு கரும்புக்கு மத்தியில நரியோடணும், வாழ நட்டா ரெண்டு வாழைக்கு மத்தியில வண்டியோடணும். தென்னை நட்டா ரெண்டு தென்னைக்கு மத்தியில தேரோடணும்@" என்பதை பாடல் மூலம் கற்றுக் கொடுக்கிறார்.

"நண்டூர நெல்லு
நரியோடக் கரும்பு
வண்டியோட வாழை
தேரோடத் தென்ன"[11]

என்பதே அப்பாடல்.பயிர்களுக்கு தண்ணீர் எறைக்கும் போது அவர்கள் பயன்படுத்தும் பொருட்களும், அவர்களுடைய ஏழ்மை நிலையும் புலனாகிறது.

"ஒத்தக் கமலை...

தொத்த மாடு...

ஓட்டைச் சாலு...

கிழிஞ்ச தோலு... [12]

இந்தப் பொருட்களை வைத்து நீர் இரைப்பதால் அந்த கிணறு "வத்தாத சமுத்திரம்" என்னும் பெருமை பெற்றது.மண்ணுதான் சாப்பாடு, மண்ணுதான் மருந்து நம்மளுக்கு என்று கூறிய போய்த்தேவர் தன் பேரனிடம்

"அழுத்துறா மொக்க... அழுத்துறா...

தை ஒழவு அய்யாட்டுக் கை (ை)டடா...[13]

என்ற பழமொழியைக்கூறி ஆயிரம் ஓரம்போடு, ஆட்டுக்கெட மாதிரி ஆகுமா நெலத்துக்கு? ஆட்டுப்புழுக்கையும் கோமியமும் சேந்தா பொட்டக்காடு பொன் வெளையுமிடா. அப்படி அஞ்சு ஆட்டுக்கெட வச்சா என்ன ஊட்டமோ அப்படி ஒரு ஊட்டமடா தைமாச ஒழவு" என்று அவரே அப்பழமொழிக்கு விடையும் கூறுகின்றார்.

### இறுதிச் சடங்கு

பிறந்த ஒரு மனிதன் இறப்பது உறுதி. வானத்திலிருந்து ஒரு நட்சத்திரம் உதிர்ந்தாலும், மரத்திலிருந்து ஒரு ப உதிர்ந்தாலும் இழப்பு இழப்புதான். கள்ளிக்காட்டு மக்கள் இறந்தவர்களுக்குச் செய்யும் இறுதிசடங்குகளை காண்போம்.

ஒருவரின் இறப்புக்குப் பின் அவரது உடலுக்குச் செய்யப்படும் சடங்கு முறைகளே இறுதிச் சடங்கு எனப்படும். பிணங்களுக்கு கிடந்த திருக்கோலம் அல்ல. அமர்ந்த திருக்கோலம் தான் கள்ளிக்காட்டுக் கலாசாரம். ஒரு நாற் கலியில் நிமிர்த்தி உட்கார வைத்து நாற்காலியின் கைகளில் பிணத்தின் கைகள் படிய வைத்து, கால் கட்டைவிரல் இரண்டையும் இணைத்துக்கட்டி உயிருள்ள ஆள்போல் உட்கார வைத்து அலங்காரம் செய்வார்கள்.

கள்ளிக்காட்டில் எல்லாருக்கும் கல்யாணத்துக்குப் பிறகு நடக்கும் இரண்டாம் அலங்காரம் அதுதான். நெற்றியில் விபூதி, சந்தனம், குங்குமம், அதன் மேல் நெத்திக்காசு வைப்பார்கள். பிணத்தின் தலைமாட்டில் "ஊதுவத்தி கொளுத்தி வைப்பது மரபு ஆகும்". பின்னர் இறந்தவர்களின் ரத்த சொந்தங்கள் சாம்பிராணி காட்டுவார்கள். இறுதிக்கடனுக்கு "நீர் மாலைதான்" முதல் சடங்கு. ஆறு உள்ள ஊரிலுள்ளவர்கள் ஆற்றிலோ, ஆறில்லாத ஊரிலுள்ளவர்கள் குடிநீர் எடுக்கும் பொதுக் கிணற்றிலோ உறவினர்களுடன் சென்று சாமி கும்பிட்டு நீர்க் குடம் சுமந்து வருவார்கள். நீர்மாலையில் இரண்டு வகை கள்ளிக்காட்டில் உண்டு.

1. பொம்பளைக நீர்மால 2.ஆம்பளைக நீர்மால

தாய்க்குத் தலைமகள் நீர்க்குடம் சுமந்து வரவேண்டும். அவளுடன் வயதான பெண்கள் சென்று தண்ணீர்க் குடம் சுமந்து வருவார்கள்.

ஆம்பளைக நீர்மால இறந்தவர்களின் மகன் எடுத்து வர வேண்டும். அவன் இல்லாவிட்டால் பேரனும் நீர்க்குடம் எடுத்து வர வேண்டும். நீர்மாலை நீரில் இறந்தவர்களை இரண்டாம் முறை குளிப்பாட்டி பிறந்த வீட்டுக் கோடி உடுத்தி, மூங்கில் மரத்தால் கட்டிய தேரில் வைத்து சுடுகாட்டிற்கு கொண்டு செல்வதற்கு முன் "அம்பலத்தில் தேரிறக்கு தலைமகள் குடம் சுமந்து மூன்று முறை சுற்றி வந்து குடத்தை உடைத்துச் செல்ல வேண்டும். அதன் பிறகு சுடுகாட்டில் தேர் இறக்கி சாஸ்திரம் சடங்கு முடித்துக், குழிக்குள்ளே பிணத்தை இறக்கி, இடக்கையால் மண்தள்ளி, தலைமாட்டில் கள்ளி நடுவார்கள். பின்னர் எட்டாம் நாள் உருமாக்கட்டு என்று ஏக மனதாய் நாள் குறித்துவிட்டு எல்லோரும் அவரவர் வீடு செல்வர்"[14] மேற் கூறியவற்றின் மூலம் கள்ளிக்காட்டு மக்களின் இறுதிச் சடங்கு முறைகள் நமக்கு புலனாகின்றன.

### மண்மீது மக்கள் கொண்டுள்ள பற்று

கள்ளிக்காட்டிலுள்ள மக்கள் தங்கள் நிலத்தோடு, நிலமாக, மண்ணோடு உண்ணாக இணைந்துள்ளனர் என்பதை ஆசிசிவர் காட்டுகிறார். பேய்த்தேவர் வறண்ட நிலத்தை உழும் போது அவர் காலில் மேழியானது குத்தி ரத்தம் வர அவர் அக்காயத்தில் உன்எடுத்து அடிக்கிறார். மேலும் தன் போனிடம் "மண்ணுதான் சாப்பாடு மண்ணுதான் மருந்து நம்மளுக்குழூ என்று கூறுவதன் மூலம் மண்மீது கொண்டுள்ள பற்று புலனாகும்.

பேய்த்தேவர் வண்டிநாயக்கரின் தன்னுடைய ஊரடித் தோட்டத்தை அடகு வைத்து பணம் வாங்குகிறார். நாயக்கர் திடீரென்று இறக்க, அவருடைய வைப்பாட்டி பணம் கொடுங்கள், இல்லையென்றால் சொத்தை எழுதித் தாருங்கள் என்று கேட்டதும்

இடிந்துபோய் உட்கார்ந்து விடுகிறார்,

"என்னென்னமோ எழந்தேன் இதையுமா எழக்கணும்

செக்க செவந்த மண்ணு - நான்

தின்னு தின்னு பாத்த மண்ணு.

அப்பன் வெதச்ச மண்ணு.

ஆத்தா களை எடுத்த மண்ணு.

வம்சம் வளத்த மண்ணு

வகுத்துப்பசி தீத்த மண்ணு

இது இல்லேன்னு போடுமுன்ன என்னுசுரு போனா லென்ன?"[15]

என்று பாடுவதன் மூலம் அவர் மண்மீது கொண்டுள்ள பற்றும், தம் பெற்றோர்கள் மீது கொண்டுள்ள பற்றும் புலனாகிறது. கள்ளிக்காட்டில் அணை கட்டுவதால் ஊர் நீரில் மூழ்கும் என்று தெரிந்த மக்கள் "புடி மண்ணெடுத்து" செல்கின்றனர். பேய்த்தேவரிடம் அம்மக்கள் ஓங்கையால் மண்ணெடுத்துப் போடு, அதை நாங்கள் "தங்கத் தூளா" நெனைச்சுவாங்கிகொள்கிறோம் என்று மடியேந்தி நிற்பதன் மூலம் இம்மக்கள் மண்மீது கொண்டுள்ள பற்று நன்கு புலனாரும்.

## முடிவுரை

ஒரு தலைமுறையின் வரலாறும,ு ஒரு சமூகத்தின் உழைப்பும், ஒரு குலத்தின் வாழ்வின் வலியும் கண்ணீருக்குள் புதைந்து கிடக்கும் கள்ளிக்காட்டின் வாழ்வியலை நோக்கும்போது, அங்கு வாழ்ந்த மக்கள் இயற்கையோடு போராடியவர்கள் மட்டுமல்ல. இயற்கையோடு இணைந்து வாழக் கற்றவர்கள் என்பதும் புலப்படுகிறது. வறண்ட மண்ணையும் வாழ்வின் வளமாக மாற்றிய அவர்களின் உழைப்பு, எளிய உணவிலும் நிறைந்திருந்த தன்னிறைவு, நோய்க்கு மருந்தாக மாறிய நாட்டுப்புற அறிவு, உறவுகளை உயிராகக் கருதிய பண்பாடு, பிறப்பு முதல் இறப்பு வரை கடைப்பிடித்த சடங்குகள் என ஒவ்வொன்றும் அவர்களின் வாழ்வியல் ஞானத்தின் சுவடுகளாகத் திகழ்கின்றன. இன்று கள்ளிக்காடு ஒரு கிராமமாக மட்டும் நம் கண்முன் நிற்பதில்லை. ஒரு காலத்தின் பண்பாட்டு அருங்காட்சியகமாக நம் முன் நிற்கிறது. காலத்தின் வளர்ச்சியும், அணையின் உருவாக்கமும் அவர்களைத் தங்கள் பர்வீக மண்ணிலிருந்து பிரித்தபோதிலும், மண்ணை அவர்களிடமிருந்து பிரிக்க முடியவில்லை. அவர்கள் மண்ணை விட்டுப் பெயர்ந்தார்கள்@ ஆனால் அந்த மண்ணின் வாசனை அவற்றோடு வாழ்ந்த மனிதர்களின் நினைவுகளும், பண்பாட்டு மரபுகளும் இலக்கியத்தின் வழியே மீண்டும் உயிர்பெறுகின்றன.

## அடிக்குறிப்புகள் :

1.க.ப. அறவாணன் தமிழர்தம்மறுபக்கம், ப.45

2 க.ப.அறவாணன் தமிழ்ச்சமுதாய நோய்கள் - வேரும் விழுதும், ப.18

3. வைரமுத்து - கள்ளிக்காட்டு இதிகாசம், ப.27

4. மேலது, ப.42

5. மேலது, ப.83

6. மேலது, ப.137

7. அ.மாணிக்கம் திருக்குறள் தெளிவுரை, ப.191

8. வைரமுத்து - கள்ளிக்காட்ட இதிகாசம், ப.70

9. மேலது, ப.98

10. மேலது, ப.344

11. மேலது, ப.71

12. மேலது, ப.77

13. மேலது, ப.18

14. மேலது, ப.115

15. மேலது, ப.276

## துணைநின்ற நூல்கள்

1. கள்ளிக்காட்டு இதிகாசம், வைரமுத்து,திருமகள் நிலையம்,சூர்யா லிட்டரேச்சர்
2. தமிழர்தம்மறுபக்கம், க.ப. அறவாணன், தமிழ்க்கோட்டம்
3. தமிழ்ச்சமுதாய நோய்கள் - வேரும் விழுதும், க.ப. அறவாணன், தமிழ்க்கோட்டம்
4. திருக்குறள் தெளிவுரை, அ.மாணிக்கம், மரினா புக் ஹவுஸ்

© 2026 முனைவர். ஜஸ்டின் பியுலா ம. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..